# இன்றைய இறைவார்த்தை

# ஜூலை 3

## புனித தோமா – திருத்தூதர் – பெருவிழா

**முதல் வாசகம்:**

திருத்தூதர்களை அடித்தளமாகக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்.

**திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 2 : 19 – 22**

சகோதரர் சகோதரிகளே, இனி நீங்கள் அன்னியர் அல்ல. வேற்று நாட்டினரும் அல்ல. இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள். கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறது. நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா உமக்கு நன்றி.**

**பதிலுரைப் பாடல்:**
**திருப்பாடல்: 117 : 1, 2 (பல்லவி: மாற்கு 16:15)**
**பல்லவி: உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.**

1. பிற இனத்தாரே! நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள். மக்களினத்தாரே! நீங்கள் அனைவரும் அவரைப் புகழுங்கள்! பல்லவி

2. ஏனெனில், ஆண்டவர் நமக்குக் காட்டும் மாறாத அன்பு மிகப் பெரியது. அவரது உண்மை என்றென்றும் நிலைத்துள்ளது. பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (யோவான் 20:29)**
அல்லேலூயா, அல்லேலூயா!
நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!

✠ **தூய யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 20 : 24 – 29**

பன்னிருவருள் ஒருவரான திதிம் என்னும் தோமா, இயேசு வந்த போது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம், "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்ப மாட்டேன்" என்றார். எட்டு நாள்களுக்குப் பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், "இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்றார். தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்றார். இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார்.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

மேலோட்டமாகப் பார்த்தால் தோமா ஒரு சந்தேகப் பேர்வழி. நம்பிக்கைக் குறைவானவர்களின் பகராளி. ஆனால், உண்மை அதுவல்ல. தோமா பேறுபெற்றவர். ஒருமுறை, இருமுறை அல்ல, மும்முறை பேறுபெற்றவர். எப்படி? உயிர்த்த இயேசுவின் துளையுண்ட கைகளையும், குத்துண்ட திருவிலாவையும் மிக அருகில் இருந்து பார்க்கும் பேறு பெற்றார். மற்ற எந்த திருத்தூதருக்கும் கிடைக்காத ஒரு பேறு. இந்த நிகழ்வுக்குப் பிறகு, தோமாவின் வாழ்வு நிச்சயமாக மாறிவிட்டது. இரத்தக் கறை படிந்த இயேசுவின் திருக் காயங்களை எப்போதெல்லாம் தோமா நினைவு கூர்ந்தாரோ, அப்போதெல்லாம் "எனக்காகத் துளையுண்ட கைகள், எனக்காகக் குத்துண்ட திருவிலா" என்று எண்ணி மனம் உருகியிருப்பார், நம்பிக்கையில் திடம் கொண்டிருப்பார் என்று நிச்சயம் நம்பலாம்.

"நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என இயேசுவை அறிக்கையிட்ட முதல் திருத்தூதர் தோமா தான். என்னே ஒரு விசுவாச அறிக்கை. இன்று வரை நாமும் இதே வரிகளைச்

சொல்லித்தானே இயேசுவின் மீதுள்ள நமது விசுவாசத்தை அறிக்கையிடுகிறோம். “திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை”யின் தொடக்கம் இந்த விசுவாச அறிக்கையாகத்தான் இருக்க வேண்டும். அந்த வகையிலும் தோமா பேறுபெற்றவராகிறார்.

இயேசு தோமாவிடம் “நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்றார். அவராலே தான் நம்மைப் போன்று இயேசுவைக் காணாமலே நம்புகின்றவர்கள் பேறுபெற்றவர்களாக மாறியிருக்கிறோம். எனவே, அவருக்குப் பின் வந்த அனைத்துத் தலைமுறையினரையும் பேறுபெற்றவர்களாக மாற்றிவிட்டார் புனித தோமா. இப்போது சொல்லுங்கள், தோமா மும்முறை பேறுபெற்றவர் தானே? சிந்திப்போம். செபிப்போம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********